உ

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

430

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றுண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மாம்பாக்கம்; விசய, ஐப்பசி; 30—10—53 தளிர்-2

...OF THE REGISTRAR OF BOOKS
11 NOV 1953

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## உலகத்தைவிடப் பெரியது!

ஒன்றை விட ஒன்று பெரிதாயிருப்பதைப் பார்க்கவும் அறியவும் நுகரவும் விருப்பம் மிகுவது இயல்பு!

உலகத்தில் மக்கள் மலைத்து நிற்கும்படி உள்ள பெரிய பொருள், மலை! வானத்துக்கும் கீழே கடலுக்கும் இடையில் அது ஓங்கித் திரண்டிருத்தலை நாம் அறிகின்றோம்.

ஆனால், அதனினும் கடல் பெரிதாய் இருக்கப் பார்க்கின்றோம். பெரும் பரப்பிலும் ஆழத்திலும் வளத்திலும் மலையைப் பார்க்கினும் கடல் எவ்வளவோ பெரிதாய் உள்ளது!

இத்தகைய மலைகள் பலவும் கடல்கள் பலவும் அவற்றோடு நிலப் பகுதிகள் பலவும் தன்னுட் கொண்டு திரண்டு மிகப் பெரிதாய்த் திகழ்வது உலகம்!

இனி இவ்வுலகத்தினும் பெரியதொன்றைக் காண நம் தெய்வத் திருவள்ளுவர் முயல்கின்றார்; முயன்று வெற்றியுங் கண்டிருக்கின்றார்! இது பனிமலை முடியைக் காணும் வெற்றியினும் எத்தனையோ மடங்கு பெரியது!

பொருள்களில் எவ்வளவு பெரிதாகப் பார்த்தாலும், மதிப்பு, பயன்படும் பண்பை ஒட்டியே மிகுந்திருக்கிறது; உலகத்தை விட, எத்தனையோ உலகங்களைத் தன்னுட் கொண்டு திகழும் வானத்தைப் பெரிதென்று சொல்லலாம்; உலகத்தின் வளமெல்லாம் வானத்தின் பயன்படும் மழைப்பண்பில் இருத்தலின், பண்பாலும் வானம் பெரியதேயாம்; உருவினும் குணம் மேம்பட்டதென்பது, வாழ்க்கைச் சிக்கலில் ஈடுபட்டுக்கிடக்கும் உலகியலாளரும் இனிதறிந்ததொன்று!

பயன்படும் பண்பே, உதவிகளுக்குக் காரணம்! அத்தகைய உதவிகளில் மிக உயர்ந்தது, வையகத்தினும் வானகத்தினும் பெரிதாகிய 'செய்யாமற் செய்த உதவி'! அடுத்தது, வையகத்திற் பெரிதாகிய 'காலத்தினாற் செய்த உதவி'! அதற்கும் அடுத்தது, கடலை விடப் பெரிதாகிய 'பயன் கருதாமற் செய்த உதவி'!

திருவள்ளுவர் இவ்வாறு பெரியவைகளைப் பண்புகளாற் கண்டுபிடித்திருக்கின்றார். அறிந்து பழகிப்பெரியவர்களாவது கடமை!

காலத்தினால் செய்த நன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்—ஒருவர் தக்க காலத்தில் செய்த நன்றி சிறியதே என்றாலும், ஞாலத்தின் மாணப் பெரிது—காலத்தின் அருமையை நோக்க அது உலகத்தை விட மிகப் பெரிதாய் மதிக்கப்படும்.

காலத்தில் என்பது காலத்தினால் என்று வந்தது; இது வேற்றுமை மயக்கம்; இப்படி மயங்கி வரவேண்டிய காரணம், காலத்தினால் என்னும் மூன்றாம் வேற்றுமைக் கருத்தும் சிறிது கலந்து வரும் பொருட்டு. அதாவது, அந்த நேரத்தின் இன்றியமையாமையால் உதவி செய்யவும் உதவி பெறவும் நேர்ந்தமையின் என்பது; காலத்தினால்செய்யும்படி நேர்தலின், 'காலத்தினாற் செய்த' என்றார்.

ஞாலமும் காலந்தோறும் பயன்படுவதேயாயினும், அந்த நேரத்தில் அந்த உதவி நேராமற்போனால் எனை உலகத்தால் எதும் பயனின்மையால், அச் சிறியது ஞாலத்தினும் பெரிதாயிற்று! மாணப் பெரிது என்றார், பயன்படும் மாட்சியிற் பெரிதானமையின் என்க.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.



| கிளை | விசய, ஐப்பசி, | தளிர் |
|---|---|---|
| 6 | 30-10-53 வெள்ளி | 2 |



## மணி மறைந்தது!

தமிழ் மக்கட்கு இது ஒரு சோதனைக்காலம் போலும்! தமிழ்ப்பெருந் தலைவர்கள் ஒவ்வொருவராக மறைந்து கொண்டே இருக்கிறார்கள்.

தமிழ்த்தாதா உ. வே. சாமிநாதய்யர், தமிழவேள் உமாமகேசுவரனர் தமிழிசைத் தலைவர் விபுலாநந்த அடிகள், தமிழ் ஐயா ந. மு. வேங்கடசாமி நாட்டார் போன்றவர்கள் அடுத்தடுத்துச் சில ஆண்டுகளுக்குள் மறைந்து போனார்கள்.

தமிழ் மலையே சாய்ந்துவிட்டது என்னும்படி 1950 ல் திருசிரியர் மறைமலை அடிகளார் திருவுருக் கரந்தார்.

அண்மையில் தமிழ்ப்பண்பாடே தகைந்துவிட்டது என்று எண்ணும்படி தமிழ்ப் பெரியார் திரு. வி. க. மறைந்தார்.

இப்போது (24-10.53 ல்) தமிழ்ப் புலவர் வரிசையில் 'பண்டித மணி' எனப் பல்லோரும் போற்ற இலகிய பெரியார் மகிபாலன்பட்டி முதுபெரும் புலவர் மகாமகோபாத்தியாய மு. கதிரேச செட்டியார் அவர்கள் மறைந்துவிட்டார்கள் என்னும் செய்தி கேட்கின்றோம்.

பண்டைக்கால முறையில் வான்முறையாகப் பயின்றபுலவர் வரிசையில் சேர்க்கூடியவர்கள் இனி யார்? ஆழ்ந்த மதி நுட்பத்திலும், தமிழ்மொழியின் சுவைத்திறத்தைப் பலவகையாலும் சுவைத்துச் சுவைத்து உணர்ந்து மகிழும் சுவையுணர்ச்சியிலும், கேட்டாரைப் பிணித்துக் கேளாதவரும் வேட்பமொழியும் சொல்வன்மையிலும், தமிழின் தனியழகில் திளைக்கும் எழுத்து நடையிலும் வல்ல பெரும் புலவர் அவர்!

பண்டிதமணியார் தமிழும் வடமொழியும் ஒருங்குவல்ல பெரும் புலவர். புலமை நுட்பம் தெரிந்து பழம் பாடல்களுக்குச் சுவைபடப் பொருள் விரிக்கும் ஆற்றல் பெற்றவர்கள்; கட்டுத்தடங்கலின்றிப் பாட்டன்மார் போன்மார்களிடம் பேசுவது போலச் சிரிக்கச் சிரிக்கப் பேசி உயர்ந்த பொருள்களையும் எளிதாக மக்களுக்கு விளக்கும் வல்லமை உடையவர்கள்; திருவாசகத்தில் சிறந்த ஈடுபாடும் [illegible] உடையவர்கள். சைவ சா[illegible]களிலும் திருமுறைகளிலும் [illegible]ர்ந்தவர்கள்; அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பல்கலைக் கழகமாக வளர்ந்தது அவர்களால் எனலாம். அவர்கள் அங்கே பல ஆண்டுகள் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பணிசெய்திருக்கிறார்கள்.

சுக்கிர நீதி முதலியவடமொழி நூல்களைத்தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

இறுதியாக அவர்கள் திருவாசகத்துக்குக் 'கதிர்மணிவிளக்கம்' என்னும் உரையை வகுக்கத் தொடங்கிச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவைப் பகுதிகளுக்கு அரிய விளக்கங்களை வெளியிட்டார்கள்.

திருவாசகமுழுவதற்கும் அவர்களால் உரைவகுக்கப்படுமென்று மிகவும் மகிழ்ந்திருந்த தமிழ்ச் சைவ உலகம் ஏமாறி நிற்கிறது. என்னே தமிழ் மக்கள் தீவினை!

பண்டிதமணியின் நல்லுயிர் தில்லைப் பாமன் திருவடிகளில் அமைதியுறுக! என எண்ணுவதன்றி யாம் செய்யக் கூடியது வேறு என்ன இருக்கிறது!

—ந. ரா. ஆட்லரசு.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்பட்டுக் காத்தும் படைத்துங் காந்தும் விளையாடுகின்றநிலையும், மீண்டும் ஒடுங்குகின்ற நிலையும் இவ்வுவமை வாயிலாக வெளிப்படுதலைநினைக்குந்தொறும் நாவினிக்கிறது, உள்ளத்தில் உவகை பொங்குகிறது.

'யான் கண்ட இன்பம் இவ்வையகம் பெறுக' என்று பெரியோர்கள் கூறிவைத்தபடி யான் கேட்டுத் துய்த்த இன்பத்தை நீங்களும் படித்து இன்புற வேண்டுமென்று ஈண்டு எழுதத் துணிந்தேன்.

# கீதை

(பா. வ.)

(முன் தொடர்ச்சி)

## 10. இறைவனின் பரந்த தன்மை:

கண்ணன்: 'வீரனே பின்னும் என் அரிய வாக்கைக் கேள். இது என் பக்தனுன உனக்கு உன் நன்மையை நாடிப் போதிக்கப்படுகின்றது.

"பிறப்பற்ற, ஆதி அற்ற, பிரபஞ்சங்களெல்லாவற்றிற்கும் தலைவனுன என்னை உணர்பவன், தெளிவு கொண்டு எத்தகைய வினையினின்றும் விடுபடுவான்.

"பகுத்தறிதல், அறிவு, தெளிவு, மன்னித்தல், உண்மை, தன்னடக்கம், அமைதி, இன்பம், துன்பம், இருப்பு, மறைவு, பீதி, தீரம், தீதற்ற தன்மை, சமத்துவம், திருப்தி, கடுமை, கொடை, புகழ், பழிப்பு ஆகிய பல்வேறு தன்மை கொண்ட மாந்தரெல்லோருக்கும் நானே மூலமானவன்.

"நானே எல்லாவற்றையும் உற்பத்தி செய்வோன்: எல்லாம் என்னிலிருந்து வெளி வருகின்றன. இவற்றையெல்லாம் தெளிந்தே, ஞானிகள் அளவு கடந்த உணர்வால் என்னை வந்திக்கின்றார்கள்.

"அவர்கள் வாழ்வை என்னில் அகப்படுத்தி, என்னை இடையருது எண்ணியும் என்னைப்பற்றிப் பேசியும் பொன் செய்யும் மருந்தனைய போதமென்ற மனத்தோடும், இன்பத்தோடும் வாழ்கின்றார்கள்.

"நான் தூய இரக்கங் காரணமாக, அவர்களுக்காக, அவர்கள் சீவனில் நிலைத்திருந்து, அவர்கள் ஞான தீபத்தை ஒளி கொள்ளச் செய்து, அறுதியாக வந்த அஞ்ஞானத்தைத் தகர்க்கின்றேன்.

"நானே எல்லாச் சீவன்களின் அகத்தே வீற்றிருக்கும் அந்த உயிர்ப்பு. பார்த்தா! எல்லாச் சீவர்களுடைய வித்து எத்தன்மையதானுலும், அவ் வித்து நானே சலம், அசலப் பொருள்கள் யாதாயினும் என்னினும் வேருக எவையுமில்லை. என்னுடைய அதீத சக்திகளுக்கு ஒரு முடிபும் இல்லை.

"புகழ், நன்மை, அழகு, வீரம், இவற்றின் தன்மைகள் எத்திறத்தாயினும் இவைகள் என் பேரொளியின் கூறுகளாகும். நான் இந்தப் பிரபஞ்சங்களின் ஊடே என் சக்திக் கதிர்களைப் பாப்பி இருந்து வருகின்றேன்"

## 11. இறைவனே எல்லா வடிவங்களும்:

பார்த்தன்: "ஐயனே, என்னிடம் உற்ற பரிவால் இவ்வுபரிய மறை பொருள்களை எனக்கெடுத்தியம்பினை; இவற்றுல் என் மயல் தீர்த்தது. மேலான பெரியோய்! நீர் உன்னை இங்ஙனம் விவரித்தபோதிலும், உன் ஏக உருவை நான் தெரிசிக்க விழைகின்றேன், அருளீர்.

கண்ணன்:— என் ஏக உருவை, உன் ஊனப் புலனுல் காண முடியாது. உன் அகக்கண் இதோ ஒளிர்கின்றது. என் இராச யோகத்தைப் பார்.

இவ்வாருகக் கூறி மேலோன் தன் இயல்பான உருக்கொண்டு பார்த்தன் முன் நின்றுன்.

பார்த்தன்:— இறைவனே! உன் வடிவிலே எல்லாத் தேவர்களையும் காண்கின்றேன். பல் வேறு தரத்திலிருக்கும் சீவர்களை அவர்களுக்குரிய வேறுபாட்டோடும் காண்கின்றேன்.

"நான்முக தேவனை அவனுடைய கமல அரியாசனத்திலும் எல்லா முனிவர்களையும், கட்செவிகளையும் தெய்வீகத்தையும் உன்னிலும் காண்கின்றேன். உன்னுடைய இவ்வுரு எத்தகைய பேரச்சத்தைத் தருகின்றது! போதும். உன், இதத்தையும் இத் தன்மையையும் விளக்கி உன்னைத் தொழுகின்றேன். மேலோய் எனக்கு இரங்குவாயாக"

கண்ணன்.— "இந்த அச்சந் தரும் ரூபத்தைக் காண்பதால் அஞ்சாதே; குழப்பங் கொள்ளாதே; அச்சத்தை ஒழி; உன் உள்ளம் இன்பம் கொள்ளட்டும். என் முன்னைய வடிவத்தை மறுமுறையும் காண்க'.'

பார்த்தன்:— "உம்முடைய கண்ணியமான முன்னுருவை மறுபடியும் தெரிசிக்கும் வாய்ப்பை இதோ பெற்றேன். நான் என் உரிய இயல்புக்குத் திரும்புகிறேன்."

கண்ணன்:— "என்னிடம் பக்தி கொண்டால் மட்டுமே, என்னை இங்ஙனம் கண்டு, அறிந்து அதன் உண்மையைத் தெரிந்து அதில் திளைக்க முடியும். எனக்காகச் செயல் புரிவோன் என் பக்தன்; அவன் பற்றிலிருந்து விடுபட்டு, உள்ளக் காழ்ப்பை வென்று, என்னை வந்தடைகின்றான்''.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

12. பக்தி:

பார்த்தன்: "யோகம் சிறப்பாகக் கைவரப் பெற்றவன் யார்? உன்னிடம் பக்தி கொண்டவனா? அல்லது கட்புலனுக்கும் மனதுக்கும் விளங்காது அழிவற்று எப்பொருட்கும் பின் இருக்கும் அச் சக்தியைப் போற்றுபவனா?"

கண்ணன்:—" பக்தி மேலீட்டால், சித்தத்தை என்பால் நிலை பெறச் செய்து, எப்போதும் சமத்தன்மையில் என்னை வழிபடுவர்கள்தான் யோகத்தில் தலை சிறந்தவர்கள்.

"கட்புலனுக்கும், மனதுக்கும் புலனாகாது பொருள்களினூடே உள்ள சக்தியை வழிபடுவர்களும் என்னைத்தான் வந்தடைகின்றார்கள். ஆனால் அந்தப் பாதையோ, உடலெடுத்த மாந்தருக்கு மெத்தக் கடினம். உன் சித்தத்தைப் பக்தி மேலீட்டால் என்னிடம் வை. உன் அறிவு என்னுள் புகட்டும். இப்போதிருந்தே நீ என்னில் தங்குவாய் இதில் ஐயமே இல்லை.

"அயலாரிடம் யாதொரு தீதும் எண்ணாது, நட்புடனும், இரக்கத்துடனும் பற்றற்றும், தன்னலமற்றும், இன்பத்திலும் துன்பத்திலும் சமப்பட்டு, மன்னிக்கும் மனப்பான்மையோடும், எப்போதும் போதுமென்ற மனத்தோடும், தன்னடக்கத்தால் ஒழுங்குற்றும், உறுதியுடனும், அறிவும் சித்தமும் என்னிடத்தே செலுத்துபவன் என் பக்தனும் எனக்குஅணுகியவனும் ஆவான்.

"புகழையும், இகழையும் ஒரு மிக்க எண்ணி அமைதிகொண்டு எது வரினும் முழு திருப்தி கொண்டு, சித்தம் தளராது அளவு கடந்த பக்தியுடன் உள்ளவன் என் அருகிலுள்ளான்!

"இங்கே கூறப்பட்ட ஆத்ம ஞானத்தில், நம்பிக்கையோடு பங்கு கொண்டவர்கள், என்னைத் தலையாய குறிக்கோளாகக்கொண்டவர்கள், என் பக்தர்கள்; அவர்களே வெல்லக்கூடாத நிலைக்கு என் அடியாராவர்"

12. மாயையும் மாயையை உணர்ந்தோரும்:

கண்ணன்:— "இவ்வுடல் மாயையாலானது; அதை அறிந்தவன் மாயையையும் அறிபவன்; நான் இம் மாயையின் கூறுகளெல்லாம் அறிவோன்.

"சத்தும் அசத்தும் ஆதி அற்றவை. சத்து, அசத்தில் நிலை கொண்டு அசத்தின் குணங்களைப் பயன் கொள்கின்றது. சத்து இக் குணங்களில் பற்றுக் கொள்ளுவதே, நன்மையும் தீமையுமான கருவில் பொருந்தக் காரணமாகின்றது.

"சல, அசலப் பொருளாய்ப் பிறவி கொள்ளும் எவ்வுயிரும் மாயையும், அதை இயக்குவோனும் கூடும் கூட்டத்தால் உருக் கொள்ளுகின்றன.

"எல்லாப் பொருள்களிலும் இறைவன் வஞ்சனையற்று நிலைத்திருந்து, அழியும் பொருள்களிலும் அழியாத் தன்மையுடன் வீற்றிருக்கும் உண்மையைத் தெளிபவனே ஞானி. இந்தத் தெளிவால் எவ்வுயிரையும் மாய்க்காது போற்றுபவனே மேல் நிலைக்குச் செல்வோன்.

"ஒரு ஞாயிறு உலகம் முழுமைக்கும் ஒளி தருவதைப்போல் மாயையின் தலைவன், மாயை பூராவும் ஒளி கொள்ளச் செய்கின்றான்.

"அகக் கண்ணால், மாயைக்கும் அதன் இயக்குவோனுக்கும் உள்ள இந்த வேறுபாட்டையும், அதனால் அசத்தினின்றும் சத்து விடுதலை அடைவதையும் உணர்பவர்கள் வீட்டை எய்துகின்றார்கள்."

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ் வரலாறுகளில் எவ்வளவு உண்மை உள்ளன என்பதை வாதிப்பது நமக்குகந்ததன்று. அப்படித் தருவித் தெளியும் உண்மைகளால் நமக்காவதொன்றுமில்லை. அவைகள் கற்பனைகளானாலும் இழுக்கில்லை.

நாம் அறியவேண்டுவது சேக்கிழாரின் குரல்; உள்ளம்; அவர், சமயவாதிகளாகிய நமக்கு விடுக்கும் படிப்பினை. அவ்வளவே

அப் படிப்பினையைத் தெள்ளத் தெளிய ஓர்ந்து, அவர்வழி வந்த நாம் இன்று வளர்ச்சி குன்றிய சமயத்தை ஒளி பெற்று ஓங்கச் செய்வோமா?

**Phone. 55034. Tel. Enkayam**

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்

**பட்டாடைகளுக்கும்**
**நூலாடைகளுக்கும்**
**சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
கிடங்குத்தெரு, சென்னை 1.

# சைவத் திருமுறைகள்

(பா. வரதராசன்)

[இக் கட்டுரையாளர் ஆழ்ந்த நுண்ணுணர்வினர்; சமய உண்மைகளையும் காலநிலையையும் மக்கள் மன இயலையும் நுணுகி நோக்குகின்றார்; நிலைமைக்கேற்றபடி, உண்மை வழாமல் அழகிய விளக்கங்கள் தருகின்றார். ஆழ்ந்த சிந்தனைக்கு இவர் உரைகள் சிறந்த விருந்தமிழ்தம்! ஆ.]

சமய வளர்ச்சி இன்று தடைப்பட்டுள்ளது; முன்னேற்றம் தடைப்பட்டுத் தேக்கங் கொண்டுள்ளது. சமயம் தூயதுதான். ஆயினும் தேக்கங் கொண்ட எதுவும் தன் தூய்மையை எக்காலத்தும் தன்னகத்தே நிலைகொண்டிருக்கச் செய்யும் என்று அறியக்கூடவில்லை. புறத் தூய்மைக்குரிய நீர் ஓடிக்கொண்டிருக்கும் அளவுக்குத்தான் அதன் தூய்மையையும் தன்னகத்தே பாதுகாத்துக் கொண்டிருக்கும். தேக்கங் கொண்ட நீருக்கு எத்தகைய புனிதத்தன்மையை வலிந்து ஏற்றினும், புறத் தூய்மைக்கு எங்ஙனம் பொருந்தும்? இவ்வுண்மையே அகத் தூய்மைக்குரிய 'வாய்மையை'க் காண முற்படும் சமயத்துக்கும் சாலவும் பொருந்தும். உயிர்ப்புடனிருப்பதென்பது வளர்ச்சியடைவதுதான்; வளர்ச்சி கொள்வதோ பக்குவமடைய; பக்குவமடைவது இடைவிடா நன்மை பயக்கவே.

சமயம் 'உண்மையை' நாடித் திரிவது. 'உண்மை'யோ, எல்லையற்றது எனப்படுகின்றது; அழியாததென்றும் பேசப்படுகின்றது.

அதன் முழுமையை வரம்புள்ள மனத்தின் முழு சக்தியாலும் தெளியமுடியாது. இதுகாறும் தெளிந்ததெல்லாம் ஏதோ ஒரு பகுதியைத்தான் அறிந்தது; அத் தெளிவும் பல்வேறு நிலையில், பல் வேறு காலத்தில், பல் வேறு சூழலில் உணர்ந்ததாகும். அத் தெளிவு தெளியப்படும் காலத்தையும் இடத்தையும், ஒத்த நிலையிலேயே காணப்படும்; அதோடு அதைக் காணும் மனத்தின் பக்குவத்தைப் பொருந்தினதாகவும் அமையும்; அக்காலத்தில் நிலவியுலவும் கோட்பாட்டை ஒட்டினதாகவே புலனாகும். இவ் வுண்மைகளை வரலாற்றில் பொருத்திப் பலபடக் காணலாம்.

எனவே சமயம் வளரவேண்டும்; ஓங்கி வளரவேண்டும்; அறிவியலுக்கு எக்காரணத்தாலும் பின்னடையக் கூடாது; அறிவு முனைப்போடு வளர்வதுதான் காலத்துக்கொத்த வளர்ச்சி.

இங்குச் சமய வளர்ச்சி என்பதெல்லாம், விழுமிய ஓர் உண்மைப் பொருள் நோக்கிச் செல்லும் முன்னேற்றந்தான் கொள்ளப்படவேண்டும். அம் முன்னேற்றமே, அவ்வுண்மையை, அத் தூய்மையை, அதன் விரிவில் அதன் அருளில் மேலும் மேலும் காண வழிகோலும்.

நம் நற்றவப் பயன் காரணமாக, நாம் சிறந்த சான்றோர் பலரை ஆசிரியர்களாகக் கொண்டுள்ளோம். அவர்களை ஏத்திப் பேசும் அளவுக்குக்கூட அவர்களை நன்கு அறியாதிருக்கும் சிறுமை நமக்குள்ளது.

பன்னிரண்டாந் திருமுறையின் ஆசிரியர், சேக்கிழார் சுவாமிகள், சிறந்த சமயவாதி; அறிஞர்; அடியாருங்கூட.

அவர் யாத்த பெரிய புராணமெனப்படும், அடியார் வரலாறு, தலையாய பக்தியை விளக்குவது.

அவர் இவ்வுலகில் உடல் கொண்டு வாழ்ந்த காலம் காவலனே வழுக்கிய காலம்; மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி ஒழுகியதில் புதுமை ஏதுமில்லை. உண்மை நெறியினின்றும் மயங்கிய நெறி, நெறியல்லா நெறி ஒன்று மக்கள் முன்னே காணப்பட்டது, தமிழகத்தே.

சேக்கிழார் சிறந்த சமயவாதியல்லவோ! அதோடு காலத்தையும் சூழலையும் மக்கள் மன இயலையும் நன்குணர்ந்த சான்றோர்! சமயம் தேங்குவதை உணர்ந்தார். தேங்குதல் அதன் தூய்மைக்கு இழுக்கு; தூய்மை கெட்டால் காலப் போக்கில் அதன் உயிர்ப்பு குன்றிவிடுமென்பதை உணர்ந்துதான், உண்மையை நோக்கிச் செல்லும் தலைசிறந்த பாதையான பக்தியை, அதற்கிலக்கியமாயுள்ள அடியார் வாயிலாக, அன்பு கலந்த நெறியில் வளர்த்தார்.

நேரங் கருதி, சூழல் கருதிச் செய்த தம் முயற்சியின் பயனை வரலாற்றின் வாயிலாக நாம் அறிவோமல்லவோ?

அரசனும் மக்களும் பின்பு உணர்ந்தனர்; மதமென்றும், சமயமென்றும் எதை வேண்டுமானாலும் அறிவு மயங்கிப் பின்பற்றுவது உகந்ததன்று; தலையாய உண்மை நாட்டமே விழுமியது. அதுவே மேலான அறம், அதை ஒற்றுவதற்கு உகந்த மார்க்கமே அன்பு கலந்த பக்தி. அவர்கள் இதை உணர்ந்தது அப் பக்திக்கு இலக்கியமாயமைந்த அடியார்களின் உள்ளம் நெகிழும் வரலாற்றால்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# 'ஆசிரியர் காட்டிய மூன்று உவமைகள்'

(வெ. சா. ஏ.)

உலகில் மக்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று உண்டு உடுத்து உலக சுகமே பெரிதெனத் துய்த்துத் திரிந்து வருகின்றனர். அவர்கள், இறைவன் ஒருவன் உண்டென்று பெரியோர் பேசுதலையும் எள்ளி நகைக்கின்றனர். கருணைக் கடலாகிய இறைவன் உடலை அளித்ததன் பயனையும் எண்ணிப்பார்க்காமலே இறந்தொழிகின்றனர். அந்தோ! அவர்தம் பேதைமை என்னே!

அம் மக்களை உய்விக்கும் பொருட்டே இறைவன் அடியார்களைத் தோற்றுவிக்கின்றனன். மாயையிலே மாழ்ந்துகிடக்கின்ற அம்மக்களுக்குப் பலப்பல ஏதுக்களாலே எடுத்துக்காட்டித் தலைவனை அவர்கள் உணர்த்துகின்றார்கள். அவ்வடியார்கள், புகையைக்காட்டி ஆங்கே நெருப்புண்டென்றும், காவிரியின் நீர்ப் பெருக்கைக் காட்டி மேற்கில் மழை பொழிந்ததென்றும் தெளிவிப்பர். (அனுமானப் பிரமாணம்) மற்றும் காட்சிப் புலனிற்கு எளிதில் எட்டாத அருந்ததியைக் காட்ட வாசிட்டரை முன்பு காட்டிப் பிறகு அதன் கீழுள்ள சிறிய விண்மீன் அருந்ததியைக் காட்டுவர். (தூலாருந்ததி நியாயம்) அவ்வாறே, மரத்தை முன்பு காட்டி அதன்மேலுள்ள பிறைச் சந்திரனைக் காட்டுவர். (சகா சந்திர நியாயம்) பார்க்காத படிகாரத்தை உருவத்தில் கற்கண்டையொக்குமென்றும், வகையில் உப்பைப்போல் கரிக்குமென்றும், உணர்ந்திருக்கிற பொருளைக் கொண்டு ஒப்புப் பொருளை உணரச் செய்வர் (உபமானத்தால் அறிவித்தல்) கட்புலனுக் கெட்டாத நுண்பொருள் காற்று. காற்று அசையாத நிலையிலும் நாம் அதை அறியாமலே நுகர்ந்துகொண்டிருக்கிறோம். அந்நிலையில் குழந்தைகளுக்குக் காற்றை உணர்த்த விசிறிகொண்டு விசிறியுணர்த்துகின்றோம் இதைப்போலவே இறைவனிடத்திலே தோய்ந்திருக்கிற நாம் இறைவனையுணர்வதில்லை; பெரியோர்கள் உணர்த்த உணர்கின்றோம். இவ்வாறு மக்களுக்கு உணர்த்தி உய்வித்தவரே நம் இராமலிங்க அடிகள்.

வள்ளலாரைப்போலவே அரிய கருத்துகளை எளிய உவமை வாயிலாக விளக்குந் திறன் பெற்ற நம் ஐயா அவர்கள், சென்னைக் குருசாமி முதலியார் உயர் நிலைப் பள்ளியில் வள்ளலாரின் 131-ம் ஆண்டுவிழாவின் போது, தலைவனை நமக்கு உணர்த்தினார்கள் அம் முறையை எடுத்துக் காட்டுவதே இத் தலைப்பு.

அறிவினாலே அறியக்கிடக்கும் இறைவனைச் சிற்றறிவுடைய மக்களுக்கு உண்டென உணர்த்துதல் எத்துணைக் கடினமென்று இயம்பவுங் கூடாது. காண முடியாத ஒன்றைக் கண்டதுபோல் கருத்திலிருத்துவதற்கு ஆசிரியர்கள் சொன்ன ஏதுக்களும், எடுத்துக் காட்டுகளும் போன்ற எண்ணிறந்த முறைகளை நன்கு அறிந்திருக்க வேண்டும். அப்பொழுதான் கேட்பார்க்கு ஐயந் திரிபற ஒன்றைப் பற்றி உணர்த்த முடியும். பண்டைக் காலத்திலும் இறைவனைப் பற்றி எடுத்தியம்பும் ஆற்றல் [illegible] போன்ற ஒரு [illegible] இருந்திருக்கிறது. வள்ளுவர், 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே யுலகு' என்ற பாடலால் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்ற அழகும் அதை விளக்கும் முறையும் சிறு குழந்தைகளும் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் கையாண்டிருக்கிற உவமை நயமும் படிக்குந்தொறும், நினைக்குந்தொறும் உள்ளத்தில் இன்ப ஊற்று எடுத்து ஓடுகின்றது. இவ்வாறு இறைவனைப்பற்றி எடுத்தியம்பும் ஆற்றல் பெற்றவர் இந்நாளில் உண்டுகொல்! அரிது அரிது. இவ்வாறு கடினமான ஒன்றை எளிதில் விளங்க வைக்கும் ஆற்றல் பெற்றவரையே பேராசிரியர் என்று கூறுதல் சாலப் பொருந்தும்.

நம் ஐயா அவர்களும் ஒருவமை வாயிலாகத் தலைவனை எளிதில் உணர்த்துகின்றார். அதற்கு அவர் கையாண்ட உவமை ஒரு காசு. 'காசின் ஒரு புறம் பார்த்து அதன் மதிப்பும், மற்றொரு புறம் பார்த்து அதை உண்டாக்கியவரையும் அறிகின்றோம். அதுபோல், உலகையும் உலகின் சிறப்பையும் மாத்திரம் ஒருபுறம் பார்த்துக்கொண்டிருப்பதை விட்டு மறுபுறமும் நோக்கினால் உலகை உண்டாக்கிய இறைவனை அறியலாம்' என்று எடுத்துக் காட்டிய உவமையால் எத்துணை எளிமை—எத்துணை நயம்—இருக்கிறதென்பதை எண்ணிப்பார்ப்பார்க்கே இனிது விளங்கும்.

அடுத்தது வள்ளலாரின் சமரச சன்மார்க்கத்தை விளக்குவதற்குக் கையாண்ட உவமையாகும். இவ்வுவமையில் அமைந்துள்ள நயமே ஒரு தனிச் சிறப்புடையது. 'உலகில் பல மதங்கள் தோன்றி வெவ்வேறாயிருப்[illegible] ஆக்க வேலைக்கு நன்று;

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# உலகின் சிறிய சன்மார்க்கத் தலைவர்கள்

## 1. யூதர்களின் தலைவனான மோசேயின் வரலாறு

### கி. மு. 1300 (MOSES)

ஆதியில் யூதர்கள் வேதகால ஆரியர்களைப்போலவே கால் நடைகளைப் பேணி அதன் வாயிலாக வாழ்ந்து வந்த ஒரு சிறு கூட்டத்தினர். அப்போது அவர்கள் எவ்விதச் சிறப்பும் பெற்றிருக்கவில்லை. அவர்களுடைய புராதனத் தாய் நாடு, யூப்ரடீஸ் ஆறு கடலோடு கடக்குமிடத்தே இருந்த ஒரு சிறிய பகுதியாகும்.

கிறித்து பிறப்பதற்கு ஒரு இருபது நூற்றாண்டுகளுக்கு முன், அவர்கள் தங்கள் தாய் நாட்டினின்றும் நீங்கிக் கால் நடைகளைப் புரக்கும்நோக்குடன் வளம் பொருந்திய புற்றரைகளை நாடி அக்காலத்துப் புகழோங்கிய பாபிலோனிய அரசின் எல்லைக்குள் சென்றார்கள். பின் அங்கிருந்து நீங்கி மேற்கு நோக்கித் தங்கள் நாடோடி வாழ்க்கைக்கு ஒரு தற்காலிக இருக்கையை நிறுவும் பொருட்டு ஓர் உகந்த நிலத்தை நாட்டிச் சென்றார்கள். இவ்வாறு நெடு வழி கடந்து பல நாடுகள் கடந்து, பல தலைமுறைகளுக்குப் பின் எகிப்து நாட்டில் வந்து ஒதுங்கினர். இங்கே ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக எகிப்தியர்களோடு ஒன்றி வாழ்ந்தார்கள். அக்காலத்தில் எகிப்து நாடு ஒரு வகைக் கொள்ளைக் கூட்டத்தாரால் வெற்றி கொள்ளப் பெற்றது. அந்த நாட்களில் யூதர்கள் இந்த அன்னியர்களுடன் இயைந்து ஒழுகியதால் யாதொரு இடையூறும் வருத்தப்படாது கால் நடைகளுக்கான புல் நிறைந்த வளமிக்க நிலங்களை உரிமையாகப் பெற்று வாழ்ந்து வந்தார்கள்.

நீண்ட போருக்குப் பின், எகிப்தியர்கள் இக் கொள்ளைக் கூட்டத்தை வென்று, வெளியேற்றி, உரிமையை நிலைநிறுத்தியபோது, அன்னியருடன் ஒத்துழைத்த யூதர்களுக்குத் தீங்கு விளைவிக்கப்பட்டது. அவர்கள் அடிமைகளாக்கப் பட்டனர். இராசபாட்டைகளைக் கட்டுவிக்கவும், எகிப்தின் கீர்த்தி வாய்ந்த சவக்கோபுரங்களைக் கட்டுவிக்கவும் (Pyramids) கட்டாயப் படுத்தப்பட்டனர். எகிப்தின் வன்மை மிக்க நகர் காவலர்களின் பாதுகாவலால் அவர்களால் அந் நாட்டை விட்டு வெளியேற முடியவில்லை.

இவ்வாறு பல்லாண்டுகள் அடிமை வாழ்வின் இன்னலில் அல்லலுற்ற அம் மக்களிடையே 'மோசே' என்னும் ஒரு யூத இளைஞன் தோன்றினான். அவனே அம் மக்களை வாழ்விக்க வந்த ஒரு சன்மார்க்கி. மோசே நீண்ட காலம் பாலை வனத்தில் வாழ்ந்தவன். அங்கு, தன் பழைய மூதாதையர்களின் எளிய நல்லியல்புகளைத் தெளிந்து போற்றினான். அம் மூதாதையர்கள், நகரங்களினின்றும் நகர வாழ்வினின்றும் விலகி நெடுந்தூரம் சென்று அப் பாலை நிலத்தில், அயல் நாட்டாரின் 'நாகரீகமான' சோம்பல் வாழ்க்கையின், பகட்டு வாழ்க்கையின் பிடிகளில் சிக்காது வாழ்ந்து வந்தவர்கள்.

மோசே, தன் இனத்தாரை, தம் மூதாதையர் வழி, அன்பு கொள்ளுமாறு திருத்த முயன்றான். தன்னைத் தூக்கி வந்த எகிப்திய சேனைகளுக்குத் தப்பி, தன்னுடன் தன் இனத்தாரையும் எகிப்திய சமவெளியின் நடுவே இருந்த 'சினெய்' என்னும் குன்றின் அடியே கொண்டு சேர்த்தான். நெடு நாட்கள் பாலை நிலத்திடையே நடத்திய வாழ்க்கை காரணமாக, அவன், இடி, புயல்களின் வன்மைகளை வியந்து அவைகளைக் கடவுளாகப் போற்றி வணங்கிக்கொண்டிருந்தான். இக் கடவுளர் மேலே உள்ள வானுலகத்தை அரசு புரிவதாக அவன் நம்பினான். இவர்களே கால் நடைகளையும் வாழ்விக்கின்றனர். தங்கள் வாழ்வுக்கும், மேன்மைக்கும், உயிர்ப்புக்கும், காரணமானவர்கள் என்று நம்பினான் அக் காலத்தில் மேற்கு ஆசியாவில் வணங்கப் பெற்றுவந்த பல கடவுளர்களில் ஒன்றான இந்த இடிக்கடவுள் தான் ஜிஹோவா என்ற பெயரால் அழைக்கப்பட்டது. மோசேயின் இடைவிடாப்போதனையால், இக் கடவுள் யூத இனத்துக்குச் சர்வாதிகாரியாயிற்று.

ஒரு நாள் மோசே, யூதர்களிடையே இருந்து மறைந்து போனான். அவன், கரடுமுரடாகச் செதுக்கிய இரண்டு நீண்ட சதுரக் கற்களைத் தன்னுடன் தாங்கிச் சென்றதாக ஒரு செய்தி உலவியது. அன்று பிற்பகல் குன்றின் உச்சி மறைந்து விட்டது. ஒரு வன்மை மிக்க புயலின் இருட்டு அதை மனிதனின் கட்புலனின்றும் மறைத்துவிட்டது.

மோசே திரும்பினான்! என்ன வியப்பு! அவன் தாங்கிவந்த அக் கற் பலகைகளில் சில செய்திகள் செதுக்கப்பட்டிருந்தன! அவை தான், "ஜிஹோவா", யூத மக்களுக்கு விடுத்தவை (The ten

**commandmends of rhe old testanent in the bible)** அவை இடி முழக்கங்களின் உருமலுக்கிடையேயும், மின்னல் வீச்சுகளின் ஒளியிடையேயும், முழங்கப் பெற்றுப் பொறிக்கப் பெற்றவை. அங் கொடியிலிருந்தே "ஜிஹோவா" வே யூத மக்களின் ஊழ்வினையை நிர்ணயிக்கும் முதன்மையான தலைவனாகவும், உண்மையான கடவுளாகவும் உணரப் பெற்றான். அவனே, தன்னுடைய நீதி பொருந்திய பத்தாத்தலையாய உரைகளை அவர்கள் பின்பற்ற ஆணை இட்டு, அதனால் தூய வாழ்வை மேற்கொள்ளுமாறு உணர்த்தினான்.

மோசே, யூதர்களைப்பாலைநிலத்தின் ஊடே, தங்கள் பிரயாணத்தை மேலும் தொடரச் சொன்னபோது அவர்கள் அப்படியே அவனைப் பின்பற்றினார்கள்.

வெப்பமிகுந்த நாட்டில் அம்மக்கள் உடல் நலத்துடன் இருக்க, எந்த வகை உணவை உண்ணவேண்டுமென்றும், எத்தகைய பானத்தை அருந்தவேண்டுமென்றும், அவன் சொல்லும்போது, அவர்கள் அதற்கிசைந்து ஒழுகினார்கள். முடிவாகப்பல ஆண்டுகள் கழிந்தபின் நலத்துடனும், வளத்துடனுமிருக்கத் தகுதியான ஒரு நாட்டை அடைந்தார்கள். அதுவே 'பாலஸ்தீனம்' என்பது. அங்கு முன்னமேயே குடியிருந்த மக்களை ஒதுக்கி, அழகிய பள்ளத்தாக்குகளில் பட்டினங்களை உருவாக்கினார்கள். அத்தகைய ஒரு பட்டினத்தில் ஒரு பெரிய கோயிலை அமைத்தார்கள். இதற்குத்தான் எருசலேம், அல்லது அமைதியின் இன்பம் எனப் பெயரிடப்பட்டது.

இப்போது மோசே தன் இனத்தாரின் தலைவனல்லன். அவன், பாலஸ்தீன நாட்டின் குன்றுகளின் உச்சியை நெடுந்தூரத்திலிருந்து காணமட்டும் அனுமதிக்கப்பட்டான். பின்பு, கடைசியில் தன் அயர்ந்த கண்களை மூடிக்கொண்டான். ஜிஹோவாவிடம் கொண்ட ஈடுபாட்டால், உண்மையாகவும் உறுதியாகவும் உழைத்தான், தன் இனத்தாரை அயல் நாட்டின் அடிமைநிலையிலிருந்து விடுவித்து, உரிமை வாழ்வில் நிலைநிறுத்தி ஒரு புது இல்லத்தில் குடியேற்றினான். அதோடு ஒரு தனிக் கடவுளை வணங்கும் மக்களினங்களில் யூதர்களை முதன்மையாக வைத்த பெருமையும் அவனைத்தான் சாரும்.

—பா. வரதராசன்.

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அவை பிணக்குறாமல் இணக்குற்றிருக்கவேண்டும்" என்னும் உண்மையை விளக்க "ஒரு கையில் ஐந்து விரல்கள் பிளவுபட்டிருப்பினும் ஒரு தொழிலைச் செய்யுங்கால் இணங்கி ஒன்றுபடுவது போல்" என்று காட்டும் உவமை நயம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கவில்லையா?

மூன்றாவதான உவமை அநுபூதிமான்களன்றிக் கற்றவர்களாலும் உணர்த்த முடியாததொன்று. இவ்வரிய கருத்தை விளக்க முடியாமல், 'கண்டாரும் விண்டதில்லைவிண்டாரும் சொன்னதில்லை' யென்று பாடித் தன்னிலையில் நின்றுவிட்டவர் பலர். இதை வள்ளலார், தாயுமானார் போன்ற ஒரு சிலர், பாடலால் உணர்த்திப் படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அழியாப் புகழ் பெற்றனர். இறைவனிடம் உயிர்கள் ஐக்கியப்படுகின்றன என்ற உண்மையை இராமகிருட்டின பரம அம்சர்— "இராமன் பின்சென்ற சீதையை அவள் பின் சென்ற இலக்குமணன் இராமரைக் காணும் பொருட்டுச் சற்று விலகும்படி வேண்டினான்" என்ற உவமை வாயிலாக விளங்க வைக்கின்றார். இக்கருத்தையே "—மெய்ப்பொருளாந் தாயுடன் சென்ற பின் தாதையைக் கூடிப் பின் தாயை மறந்து ஏயுமதே கிட்டை" என்று பட்டினத்தடிகள் எடுத்துக் காட்டும் நயமும்,

உடையாளுன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேனுன்
அடியார் நடுவுளிருக்கும் அருளைப்
புரியாய்

என்று மணிவாசகப் பெருமான் கூறும்விளக்கமும் படிப்போரின் உள்ளத்தை எளிதில் கொள்ளை கொண்டு வருகின்றன.

இந்தத் தானதாந் தத்துவ நிலை, அறுவடை செய்த சம்புக்கோரையைமற்றும்ஒருசம்புக்கோரையால் கட்டுவதுபோல் என்றுணர்த்தும் ஔவைப் பாட்டியின் அறிவாற்றலை யாரால் எடுத்துக் கூறமுடியும்!

இத்தநிலையைநர் ஐயா அவர்கள் "வீட்டிலிருந்து தோளோடு தோள் போட்டுக்கொண்டு சென்ற இரண்டு பிள்ளைகள் விளையாட்டு மைதானத்தை அடைந்ததும் கட்சி பிரிந்து எதிர்த்து விளையாடி, வீடு திரும்பும் பொழுது மீண்டுந் தோள்போட்டுக்கொண்டு இணைந்து வருவதைப்போல்" என்று எடுத்துக்காட்டுகிறார்கள். இதில் எத்துணைப் பொருட்செறிவு, நயம்! உயிர்களுடன் ஒடுக்க நிலையிலுள்ள இறைவன்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)